**O.S. No.17/2012**

**Date: 26/07/2019**

**பி.வா.சா-1 பொன்னையா என்ற முகம்மது அப்துல் காதர்,**

**த-பெ.காதர் மைதீன் ராவுத்தர்**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என் தகப்பனார் உடன் பிறந்த சகோதரர் பெயர் என்ன என்றால் சம்சுதீன் ஆகும். அந்த சம்சுதீன் இந்த வழக்கில் எத்தனையாவது பிரதிவாதி என்றால் 3ம் பிரதிவாதி ஆவார். இந்த வழக்கில் 4ம் பிரதிவாதி யார் என்று தெரியுமா என்றால் முகம்மது அப்துல் காதர் ஆவார். தாவாச் சொத்து ஆதியில் யாருக்குப் பாத்தியம் என்றால் என் தகப்பனாரின் தாத்தா காதர்மைதீன் ராவுத்தருக்குப் பாத்தியம் ஆகும். ஆமீனா அம்மாள் என்பது யார் என்றால் என் அப்பாவின் தாயார் ஆவார். ஆமினா அம்மாளுக்கும், தாவாச் சொத்துக்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சம்பந்தம் உள்ளது. அவருக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் கணவரின் சொத்தை அவர்தான் பார்த்துக் கொண்டார். காதர்மைதீன், சம்சுதீன் ஆகியோர் மைனர்களாக இருக்கும் வரை ஆமீனா அம்மாள் கார்டியனாக இருந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலம் ஆகியவற்றில் கண்ட சங்கதிகள் உண்மையா என்றால் உண்மைதான். என் நிருபண வாக்குமூலம் பத்தி 2ல் எனது தந்தையும், 3ம் பிரதிவாதியும் உரிய பருவ வயதை அடைந்ததும் அவர்கள் வாய்க்கிராலாக பாகம் செய்து கொண்டு, அவரவர் பாக சொத்தை அடைந்து அனுபவம் செய்து வந்துள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். வாய்க்கிரால் பாகம் எந்த வருடம், எந்த தேதி என்று நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. தாவாச் சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது, அதன் விஸ்தீரணம் என்ன என்று தெரியுமா என்றால் சர்வே எண்.352-14சி, ஆறு செண்டு ஆகும். இந்த ஆறு செண்டும் தற்போது என்னவாக உள்ளது என்றால் தற்போது பாதி இடம் காலியிடமாக உள்ளது, மீதி உள்ள இடத்தில் கடை உள்ளது. அந்த கடை யாருக்குப் பாத்தியம் என்றால் வாதிக்குப் பாத்தியம் ஆகும். பாகம் பிரித்துக் கொண்ட பின்னர் அவரவரர் சொத்துக்களை அனுபவித்து கிரையம் செய்து, விட்டார்களா என்றால் கிரையம் செய்து விட்டார்கள். அந்த பாகத்தை தான் விற்று விட்டார்களா என்றால் எனது பாகத்தையும் சேர்த்து விற்று விட்டார்கள். என் தகப்பனாரும், சிறிய தகப்பனாரும் வாய்க்கிரால் பாகம் செய்து கொண்டதில் எனக்கு பாகம் எங்கிருந்து வந்தது என்றால் என் அப்பாவின் பாகம் எனக்கு வந்தது. என் தகப்பனாரின் மறைவிற்குப் பின்னர் எனக்கு பாகம் கிடைத்தது என்றால் சரிதான். எனக்கு என்னென்ன சொத்துக்கள் பாகமாக கிடைத்தது என்று சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும், தற்போது ஞாபகம் இல்லை. என் சிறிய தகப்பனாருக்கு என்ன

## O.S. No.17/2012, Date: 26/07/2019

**பி.வா.சா-1 பொன்னையா என்ற முகம்மது அப்துல் காதர், த-பெ.காதர் மைதீன் ராவுத்தர் குறுக்கு விசாரணை - தொடர்ச்சி**

சொத்துக்கள் பாகமாக கிடைத்தது என்று சொல்ல முடியுமா என்றால் தெரியாது. எங்கள் குடும்ப பழக்க வழக்கத்தில், விவசாயம் செய்யக்கூடிய நிலங்கள் மற்றும் காலியிடங்களுக்கு புனைப் பெயர் வைத்து அழைப்போம் என்றால் சரிதான். அவ்வாறு தாவாச் சொத்துக்கு என்ன புனைப் பெயர் என்றால் வைக்கோல் படப்பு இடம் என்று பெயர் ஆகும். கொட்டடி இடம் என்று உள்ளதா என்றால் உள்ளது. அந்த கொட்டடி இடம் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது. எந்த சொத்தும் வாய்க்கிராலாக பாகம் பிரிக்கப்படவில்லை என்று எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நிருபண வாக்குமூலத்தில் வாய்க்கிராலாக என் அப்பாவும், சித்தப்பாவும் பாகம் பிரித்துக் கொண்டதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். என் எதிர்வழக்குரையில் அசல் வழக்கு எண்.287-2007 என்ற வழக்கு முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்றதாக கூறியுள்ள நிலையில், அந்த வழக்கின் விபரம் என்ன என்றால் என் சகோதரி பௌசியாபேகம், என் சித்தப்பாவின் மகள் தில்சாத் பேகம் ஆகியோர் என் மீது சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தனர். அந்த வழக்கு என்ன ஆனது என்றால் அந்த வழக்கை திரும்பப் பெற்றுக் கொண்டனர். அந்த வழக்கு என்னை தவிர வேறு யார் மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் என் சித்தப்பா சம்சுதீன் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி வழக்கில் இந்த வழக்கின் 1ம் இலக்கச் சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு முழு பாத்தியம் என்று ஒப்புக் கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் கடந்த 09.08.2007ம் தேதியில் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் 1ம் பிரதிவாதி என் தகப்பனார் என்றால் சரிதான். அந்த வழக்கு 2007ல் நடக்கும் போது என் தகப்பனார் உயிரோடு இருந்தாரா என்றால் இல்லை. அந்த வழக்கு தொடர்பான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை 1999ல் அப்துல் முத்தலிபு என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். தாவாச் சொத்தை கிரையம் செய்யும் போது, வா.சா.2 இருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் கையெழுத்துச் செய்துள்ளார். வா.சா.2 கிரையத்திற்கு முன்னர் என்னை சந்தித்து பேசினாரா என்றால் இல்லை. நான்தான் சொத்தை கிரையம் செய்வதற்கு வாதியிடமிருந்து கிரயைத் தொகையை பெற்று சித்தப்பாவிடம் கொடுத்ததாக வா.சா.2 தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.2 குத்தாலம் என்பவர் எனக்கு எப்படி பழக்கம் என்றால் அவர் புரோக்கர் ஆவார். இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி யார் என்றால் தெரியாது. மெச்சி என்பது யார் என்றால் அவரிடமிருந்து நான் கிரையம்

## **O.S. No.17/2012, Date: 26/07/2019**

**பி.வா.சா-1 பொன்னையா என்ற முகம்மது அப்துல் காதர், த-பெ.காதர் மைதீன் ராவுத்தர்**

**குறுக்கு விசாரணை - தொடர்ச்சி**

பெற்றுள்ளேன். தாவாச் சொத்தின் ஒரு பகுதியை நான் சுப்பிரமணிக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதன் பின்னர் சுப்பிரமணி, அதே இடத்தை மெச்சி என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்தார் என்றாலும், அதே இடத்தை மெச்சி எனக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றாலும் சரிதான். மெச்சி எனக்கு கிரையம் செய்து கொடுக்கும் போது, நான் சுப்பிரமணிக்கு கொடுத்த கிரயம், சுப்பிரமணிக்கு கொடுத்த கிரயம் தொடர்பான ஆவணங்களை மெச்சி என்னிடம் கொடுத்தாரா என்றால் இல்லை.

( வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது )